**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.25/2022**

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07–ம் நாள் சனிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 07.03.2026 | | |
| பெயர்: | ராஜேஸ்வரி (PW1- Cross ) | கணவர் பெயர்: | மூர்த்தி |
| கிராமம்: | சீர்காழி டவுன் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வீட்டுக்குடித்தனம் | வயது : | 56/2026 |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : 07.03.2026**

**(ஆரம்பித்த நேரம்– 12.41)**

1. நான் எனது கணவர் மூர்த்தி இறந்துவிட்டார் என விளம்புகை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது கணவர் காணாமல் போனதற்கு ஆதரவாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் எனது வழக்குரையில் சீர்காழி முகவரியை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஏன் சீர்காழி காவல் நிலையத்தில் புகார் கொடுக்காமல் வைத்தீஸ்வரன்கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனது கணவர் காணாமல் போன சமயத்தில் வைத்தீஸ்வரன்கோவில் எல்லைக்குட்பட்ட பகுதியில் குடியிருந்து வந்தோம்.

2. எனது கணவர் காணாமல் போனது சம்பந்தமாக நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதா என்றால் இல்லை. பிரதிவாதிகள் அலுவலகத்தில் எனது கணவர் காணாமல் போனது சம்பந்தமாக எவ்வித மனுக்களும் கொடுக்காத நிலையில் நான் கோரப்படுகிற பரிகாரம் எனக்கு சட்ட ரீதியில் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. தாவா வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.

மறு விசாரணை இல்லை.

(முடிவு நேரம்– 12.47)